**செய்தி வெளியீடு எண்: 846** **நாள்: 28.11.2019**

## சொற்குவைச் சொல்லாக்கப் பயிலரங்கத்தில் கல்வியியல் கல்லூரி மாணவிகள் 3700 தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்கினர்!

### அறிஞர்கள் பாராட்டு

சொல்லாக்கத்தின் மூலமே மொழியின் நலத்தைக் காக்க முடியும் என்ற விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில், சென்னை, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் 'சொற்குவைச் சொல்லாக்கப் பயிலரங்கம்' **28.11.2019** வியாழக்கிழமை அக்கல்லூரியின் கலையரங்கில் காலை **9.30** மணிக்குத் தொடங்கி நடைபெற்றது.

தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் உட்பட 60**0–க்கு**ம் மேற்பட்டோர் கலந்துகொண்ட இப்பயிலரங்கின்போது கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்ட சொல் உண்டியலில் மாணவியர் தாங்கள் உருவாக்கிய 3700 தமிழ்க் கலைச்சொற்களை வழங்கினார்கள், அவற்றில் சிறந்த 3 கலைச்சொற்களைத் தேர்வு செய்து அவற்றை உருவாக்கிய மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (1. கு. சாலினி – **Ethernet –** அண்மை வலையமைப்பு, **2**. எச். அப்ரோஸ் பாத்திமா – **Jibber - Jabber –** உளறுதல், 3. செ. புவனேஸ்வரி – Srap book – தூண்டுப்பதிவு நூல்) சொற்குவைச் சொல்லாக்கப் பயிலரங்கைச் சிறப்பாக நடத்தியதைப் பாராட்டி கல்லூரி முதல்வர் அவர்களுக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. முன்னதாக, கல்லூரி மாணவிகள் தூய தமிழில் கையொப்பமிட்ட படச்சட்டகம் இயக்ககத்திற்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

இப்பயிலரங்கில், விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பு முதல்வர் முனைவர் ம.ச. தில்லைநாயகி அவர்கள் ஆற்றிய வரவேற்புரையில், "மொழிதான் நம் முகவரி என்றும், கலைச்சொல்லாக்கத்தில் மாணவ சமுதாயத்தின் பங்களிப்பு மிகுதியாக இருக்க வேண்டும், அது மொழிக்கு அவர்கள் செய்யும் தொண்டு என்றும் தெரிவித்தார். மேலும், சொற்களின் பயன்பாடு பற்றி மாணவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திடம் கேட்டறிந்து தெளிவு பெற வேண்டும் என்றும் கூறினார்.

அவரைத் தொடர்ந்து நோக்கவுரையாற்றிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள், "தமிழ் மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் ஒன்று திரட்டி ஒரே தளத்தில் கொண்டு வந்து இணையவெளியில் உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் உயரிய

நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ‘சொற்குவைத் திட்டம்’ அறிவிக்கப்பட்டு சிறப்புற செயற்படுத்தப்பட்டு வருகிறது என்று கூறினார்.

சொற்குவைப் பணி என்பது பல்வேறு அகராதிகளிலுமுள்ள சொற்களையெல்லாம் ஒன்று திரட்டும் பணி என்றும், தமிழின் சொல் எண்ணிக்கையைப் பத்து இலட்சமாக உயர்த்தி, சொற்கள் மீள வராமல் அகற்றி, சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்வதே முதல் இலக்கு என்றும் தெரிவித்தார்.

தமிழ்மொழியை நிலைபெறச் செய்ய, புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு தமிழ்ச் சொற்களைக் கணினியில் ஏற்ற வேண்டும் என்றும் கூறினார். சதுரகராதியை இயற்றியவரும், ‘தமிழ் அகராதியியலின் தந்தை’ எனப் போற்றப்படுபவருமாகிய வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், இவ்வியக்ககத்தின் சார்பில் நவம்பர் 8–ஆம் நாள் கொண்டாடப்பட்ட ‘தமிழ் அகராதியியல் நாள்’ தொடக்க விழாவில் 9000 கலைச்சொற்கள் வெளியிடப்பட்டதையும் சுட்டிக் காட்டியவர், சொற்குவை வலைத்தளத்தில் அனைவரும் உறுப்பினர் களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பயிலரங்களில் சிறப்புரையாற்றிய, சென்னை, பொதிகைத் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு இயக்குநர் திரு. மா. அண்ணாதுரை அவர்கள், கிராமப்புற மக்களிடம் இன்றும் கலப்பில்லாத சொற்கள் நிறைந்துள்ளன. எனவே, அவர்களின் சொற்புலமையினையும் கண்டறிந்து, அவர்களின் சொல் வழக்கையும் அகராதிகளில் பதிவேற்ற வேண்டும்" என்று கூறினார்.

அவரைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் முழுக் கூடுதல் பொறுப்பு இயக்குநர் முனைவர் சி. ஜோதிவெங்கடேஸ்வரன் அவர்கள் பாடத்திட்டத்திலுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிய வேண்டும் என்றும், அறிவியல் - கணிதம் - பொறியியல் - மருத்துவம் மற்றும் பிற துறைகளுக்கும் தமிழில் சொற்களை உருவாக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும், தமிழில் கையொப்பமிடுவது நம் அனைவரின் கடமை என்றும் தெரிவித்தார்.

பயிலரங்கில் கருப்பொருளுரையாற்றிய எழுத்தாளர், கவிஞர் ஜெயபாஸ்கரன் அவர்கள், புழக்கத்திலுள்ள தமிழாக்கம் செய்யப்படாத நிறைய சொற்களுக்குத் தமிழாக்கம் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு தமிழாக்கம் செய்யும்போது ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகவும், அதே நேரம் தமிழ் மரபுக்கும், பண்பாட்டுக்கும் பொருந்தும் வகையிலும் அமைக்க வேண்டும் என்றும் கூறினார். ஊடகத்துறையினருக்கும் சொல்லாக்கப் பயிலரங்கத்தை நடத்த வேண்டும் என்ற தன் விருப்பத்தையும் தெரிவித்தார்.

தொல்காப்பியர் தமிழ்ச் சங்கத் தலைவர் புலவர் வெற்றியழகனார் ஆற்றிய கருப்பொருளுரையில், தமிழ்மொழி ஓர் இயற்கைமொழி என்றும், அறிவியல் மொழி என்றும், உடற்கூறியல் மொழி என்றும், பழைய சொல்வளத்திலிருந்து நாம் புதிய சொல்வளத்தை உருவாக்கிக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் உதவி இயக்குநர் திரு. அ. மதிவாணன் அவர்கள் தன் கருப்பொருளுரையில், மாணவர் சமுதாயம் கலைச் சொல்லாக்கத்தையும், பல மொழி அறிவையும் கற்றுக்கொள்வதன் மூலம் தமிழின் வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பை வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து, ‘அறிவியல் ஒளி’ மாத இதழின் இதழாசிரியர் திரு. நா. சு. சிதம்பரம் அவர்கள் ஆற்றிய கருப்பொருளுரையில், அணு என்ற அறிவியல் சொல் ஔவையார் காலத்திலேயே தமிழில் வழங்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி அறிவியல் சொற்களைத் தமிழாக்கம் செய்யும்போது சிறிய அளவிலும், எளிமையாகவும், பயன்பாட்டை விளக்குவதாகவும், பொருளுடையதாகவும் இருந்தால் மட்டுமே காலத்திற்கும் நிலைக்கும் என்று தெரிவித்தார்.

நிறைவாக, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் பதிப்பாசிரியர் முனைவர் மு. கோமதிவள்ளியம்மை அவர்கள் தம் நன்றியுரையில்,

2017–ஆம் ஆண்டு கூகுள் நிறுவனம் நடத்திய கணக்கெடுப்பின்படி கணினியில் அதிகம் பயன்படுத்தப்படும் இந்திய மொழிகளில் தமிழ்மொழிதான் முதன்மையிடம் பெற்றது என்பதைச் சுட்டிக்காட்டி, இப்பயிலரங்கில் பங்கு பெற்றவர்களுக்கும், பயிலரங்கம் சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**